பக்கங்கள் 19+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 28 செவ்வாய்க்கிழமை 14.10.2025 | அதிர்வு 75

## சஷீந்திர ராஜபக்ஷ பிணையில் விடுவிப்பு



முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவைப் பிணையில் விடுவிக்குமாறு 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# நேபாளத்தில் சிக்கினார் செவ்வந்தி



## அவருடன் மேலும் நால்வர் கைது

பாதாள உலகக் குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த குற்றவாளியான இஷாரா செவ்வந்தி நேபாளத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருடன் மேலும் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் விரைவில் இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, அளுத்கடை நீதிமன்றத்துக்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19 திகதி காலை கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொலை செய்யப்பட்டார். 02

# மின்சாரக் கட்டணத்தில் மாற்றம் இல்லை

## இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு



மின்சாரக் கட்டணத்தில் எந்த வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது என இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கொழும்பில் இன்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் அந்த ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் கே.எல்.சந்திரலால் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, 6.8 சதவீதத்தால் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என இலங்கை மின்சார சபை, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு முன்மொழிவுகளை முன்வைத்திருந்தது.

இது தொடர்பில், தொடர்புடைய தரப்பினர்களிடம் அந்த ஆணைக்குழு கருத்துகளையும் ஆலோசனைகளையும் கோரியிருந்தன. 02

# கட்சி கோரிக்கை விடுத்தால் மக்களின் அனுமதியுடன் முதல்வர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு தயார்!

## சஜித் அணி எம்.பி. மரிக்கார் அறிவிப்பு

"நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கே மக்கள் எனக்கு வாக்களித்தனர். மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குவது பற்றி நான் சிந்தித்துக் கூட பார்க்கவில்லை. எனினும், கட்சி கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அதற்கு மக்களின் அனுமதி கிடைக்கப் பெற்றால் நான் தயார்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.



எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் மேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்குவதற்குத் தயாரா என ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குக் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## இந்தியத் தூதுவர் - ரில்வின் சில்வா சந்திப்பு

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, இந்தியா – இலங்கை பங்குடைமையின் அண்மைய முன்னேற்றங்கள் குறித்து அவர்கள் விரிவாக உரையாடினர்.

மேலும், இரு நாட்டு மக்களின் பரஸ்பர செழுமைக்காக நெருக்கமான பொருளாதார உறவுகளை ஏற்படுத்த வேண்டியதன் வரம்பற்ற ஆற்றல் குறித்தும், அதனை வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் இருவரும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.



இந்தச் சந்திப்பு, எதிர்காலத்தில் இந்தியாவுக்கும் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கும் (என்.பி.பி.) இடையிலான பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மின்சார...

அவற்றைப் பரிசீலித்ததையடுத்து, மின்சாரக் கட்டணத்தில் எந்தவித மாற்றத்தையும் மேற்கொள்ளாது எதிர்வரும் 3 மாதங்களுக்கு தற்போதைய கட்டணத்தையே பேணிச் செல்வதற்கு ஆணைக் குழு தீர்மானித்துள்ளது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

### சஷீந்திர...

கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல – கிரிப்பன் வேவ பகுதியில் உள்ள அரசாங்க நிலத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ நுகேகொடை பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழு அதிகாரிகளால் கடந்த ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி காலை கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

### நேபாளத்தில்...

சட்டத்தரணி போல் வேடமிட்டு வந்த சமிந்து தில்ஷான் பியுமங்க கந்தனாராச்சி என்ற நபரே துப்பாக்கிச் சூடு நடத்தி இருந்தார். சம்பவ தினத்தன்றே அவர் புத்தளம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தக் கொலை பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த கெஹேல்பத்ர பத்மேயின் உத்தரவின் பேரில் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அதற்கு உதவி புரிந்த பலர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

எனினும், சட்டப் புத்தகத்துக்குள் துப்பாக்கியை மறைத்து, அதனை நீதிமன்ற வளாகத்துக்குள் கொண்டு வந்த இஷாரா செவ்வந்தி தலைமறைவாகியிருந்தார். அவரைக் கைது செய்வதற்காக விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அவர் கடல் வழியாக வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளார் என புலனாய்வுத் தகவல் கிடைக்கப் பெற்றது.

இந்நிலையில்,அண்மையில்இந்தோனேஷியாவில் கைது செய்யப்பட்ட பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த கெஹேல்பத்ர பத்மே உள்ளிட்ட சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், இஷாரா செவ்வந்தி, நேபாளத்தின் காத்மண்டு நகரை அண்மித்த பகுதியில் தொடர்மாடி குடியிருப்பொன்றில் தங்கியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பிரகாரமே இஷாரா செவ்வந்தியும் மேலும் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து சென்ற பொலிஸ் குழு ஒன்று, நேபாள பொலிஸாரின் ஒத்துழைப்புடன் அவர்களைக் கைது செய்துள்ளது.

கெஹேல்பத்ர பத்மேவுடன் செயற்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜே.கே. பாய் என்பவரின் உதவியுடன் இஷாரா செவ்வந்தி நாட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்டு நான்கு நாள்களின் பின்னர், இஷாரா செவ்வந்தி இந்தியாவுக்குக் கடல் வழியாகத் தப்பிச் சென்றுள்ளதுடன், அங்கு மூன்று வாரங்கள் தங்கியிருந்துள்ளார்.

அதன் பின்னர் இந்தியாவில் இருந்து அவர் நேபாளத்துக்குச் சென்று தலைமறைவாகி இருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், இஷாரா செவ்வந்திக்காக கெஹேல்பத்ர பத்மே பல இலட்சம் ரூபா பணத்தை வழங்கியுள்ளார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

# பிரிகேடியர் விதுஷாவின் தந்தைக்கு கரவெட்டியில் பலரும் இறுதி அஞ்சலி



தமிழீழ விடுதலைப்புலிகளின் மாலதி படையணியின் சிறப்புத் தளபதி பிரிகேடியர் விதுஷா மற்றும் மாவீரர் விதுசான் ஆகியோரின் தந்தை கணபதிப்; பிள்ளை கந்தையாவின் (குப்பூது ஐயர்) இறுதிக்கிரியைகள் நேற்று திங்கட்கிழமை யாழ். வடமராட்சி, கரவெட்டியில் நடைபெற்றன.

இதில் முன்னாள் போராளிகள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.















# யாழ். நூலகத்தைப் பார்வையிட்ட வெளிநாட்டு இராணுவ அதிகாரிகள்

(எஸ்.நிதர்ஷன்)

வெளிநாடுகள் பலவற்றின் இராணுவ அதிகாரிகள் பலர் இலங்கை இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

இவர்கள் இன்று காலை யாழ். பொது நூலகத்தைப் பார்வையிட்டனர்.

வெளிநாடுகள் பலவற்றின் இராணுவ அதிகாரிகள் பலர் நேற்று மாலை இலங்கை இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர். சுமார் 30 பேர் வரை வருகை தந்துள்ளதோடு இன்று குடாநாட்டின் பல இடங்களுக்கும் அவர்கள் பயணிக்கின்றனர்.

குடாநாட்டின் கரையோரக் கிராமங்களுக்கு இன்று பயணிக்கும் அவர்கள், நாளை நெடுந்தீவுக்கும் பயணிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

















# யாழ்ப்பாணத்தில் ஆசிரியர்களின் போராட்டக் களத்தில் சிறீதரன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

ஆசிரியர் இடமாற்ற கொள்கையைச் சரியான முறையில் நடைமுறைப் படுத்துமாறும், கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கஷ்டப் பிரதேசம் மற்றும் அதி கஷ்டப் பிரதேசங்களில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் சரியான முறையில் வகுக்கப்படவில்லை எனக் கூறியும் வடக்கு மாகாண ஆசிரியர்கள் நேற்று திங்கட்கிழமை முதல் வடக்கு



மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இன்று செவ்வாய்க் கிழமை இரண்டாவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் நேரில் சென்று சந்தித்து ஆசிரியர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

ஆசிரியர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து தாம் வடக்கு மாகாண ஆளுநருடன் பேசி தீர்வுகளைப் பெற்று தருவதாக ஆசியர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதி அளித்தனர்.





# முல்லை. மாவட்ட செயலாளருடன் துரைராஜா ரவிகரன் எம்.பி. சந்திப்பு

## முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வு

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு மாவட்டசெயலாளர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோருக்கிடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தின் விளையாட்டுத்துறை மேம்பாடு தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்தல், முல்லைத்தீவு நகரில் மணிக்கூட்டுக் கோபுரம் அமைத்தல், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வெள்ளப்பள்ளம் பகுதியில் சட்டவிரோதமாக காடுகள் அழிக்கப்பட்ட விவகாரத்திற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் பழைய பல்லவி?

இலங்கை ஒரு பெரும் நெருக்கடியை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரித்திருக்கின்றார்.

அரசு தரப்பு வெளிகாட்டிக் கொள்ளாவிட்டாலும். அரசு வட்டாரங்களில் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுகின்ற இந்த விடயம் மிகத் தீவிரமாக சிந்திக்கப்படுவதாகவும் ஆராயப்படுவதாகவும் தெரிகின்றது.

மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் 2022 இல் வீழ்ந்த இலங்கை, இப்போது ஓரளவு சமாளித்து நின்றாலும், இது அதற்கு உறுதி தரும் நிலைமை அல்ல.

சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் தான் பெற்ற கடன்களை மீளச் செலுத்துவதற்கான கால அவகாசத்தை சர்வதேச நாணய நிதியத்தின் பங்களிப்போடு ஆறு ஆண்டுகளுக்கு இலங்கை தள்ளி வைத்திருக்கின்றது. 2028 இலிருந்து அதை மீளச் செலுத்தத் தொடங்க வேண்டும்.

அதாவது இதுவரை மீளச் செலுத்தாத கடன் தவணைப் பணத்தையும் சேர்த்து 2028 இலிருந்து சர்வதேசத்திலும் உள்நாட்டிலும் தான் கடன் வாங்கிய தரப்புகளுக்கு இலங்கை கடன் மீளளிப்பைத் தொடங்க வேண்டும். அப்படி வழங்குவோம் என்று உறுதிமொழி அளித்துத்தான், அதன் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியம் தந்த மேலதிக கடன் உதவிகளோடு இப்போது மூச்சு விடுகிறது இலங்கை.

2028 இலிருந்து வருடம் தோறும் ஐந்து பில்லியன் டொலர்களுக்குக் குறையாத தொகையை தவணைப் பணமாக இலங்கை செலுத்த வேண்டி இருக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக் காட்டுகிறார். அந்தத் தொகை இலங்கை நாணயத்தின்படி - இப்போதைய டொலர் நாணயமாற்று விகிதக் கணக்கில் - வருடாந்தம் ஒன்றரை லட்சம் கோடி ரூபா ஆகும். அதாவது 2028 முதல் தினசரி 410 கோடி ரூபாவுக்கு குறையாத தொகையை கடன் மீளளிப்புக்காக இலங்கை ஒதுக்கீடு செய்ய வேண்டி இருக்கும்.

நாடு நினைத்துப் பார்க்க முடியாத பெரும் சுமையாக - பொருளாதார ரீதியில் உச்ச நெருக்கடியைத் தரப் போகின்ற - விவகாரமாக இது அமையப் போகின்றது.

இத்தகைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளுவதற்கான தயார் நிலைக்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டு.

2028 வரை எந்தக் கவலையும் இன்றி ஆட்சியில் தாங்கள் தொடர்ந்து விட்டு, கடன் மீளளிப்பைச் செய்ய முடியாத நிலையில் நாட்டை நடுவீதியில் விட்டால், தேசிய மக்கள் சக்தி மீண்டும் ஆட்சிப் பீடத்திற்கு வரவே முடியாத நிலையில் மக்களால் துரத்தியடிக்கப்படும் அரசியல் நிலைமை வரும் என்று எச்சரிக்கை உணர்வு அரசு தரப்புக்குள் அதிகம் உணரப்படுவதாகத் தெரிகிறது.

நாட்டில் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை விருத்தி செய்து, உல்லாச பயணிகளின் வருகை மற்றும் வெளிநாட்டிலிருந்து இலங்கையர்கள் உழைத்து அனுப்பும் பணம் ஆகியவை மூலம் அந்நிய செலாவணியை அதிகரித்தால் மட்டுமே, 2028 இல் - இன்னும் மூன்று ஆண்டுகளில் - இந்த அரசின் ஆட்சி காலத்தின் அந்திமத்தில் - வரப் போகின்ற பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியும். அது பற்றி அரசு சிந்திப்பதாகவோ அதை எதிர்கொள்வதற்கான தயார் நிலைக்கு நாட்டை வழிப்படுத்துவதாகவோ தெரியவில்லை.

மீண்டும் நாடு பொருளாதார நெருக்கடியில் வீழ, அதிலிருந்து மீள்வதற்காக இன்னொரு தடவை ரணில் விக்கிரமசிங்கவை அழைக்க வேண்டியிருக்குமோ தெரியவில்லை.



# இலங்கை - சீனப் பிரதமர்கள் சந்திப்பு!

இலங்கைப் பிரதமர் ஹரிணி அமர சூரியவுக்கும் சீனப் பிரதமர் லி கியாங் குக்கும் பீஜிங்கில் இரு தரப்பு கலந்துரையாடல் நடைபெற்றது.

2025 ஆம் ஆண்டுக்கான பெண்கள் தொடர்பான உலகத் தலைவர்கள் கூட்டத்தின் ஒரு பகுதியாக இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, கலாசாரம் மற்றும் மக்களிடையேயான பரிமாற்றங்களில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

அதிகாரபூர்வ கடன் வழங்குநர்களுடனான இலங்கையின் அண்மைய கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து சீனப் பிரதமரிடம் இலங்கைப் பிரதமர் விளக்கிக் கூறியுள்ளார்.



ஒரு முக்கிய வளர்ச்சி பங்காளியாகச் சீனாவின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த இலங்கைப் பிரதமர், பாதை மற்றும் அணை முன்முயற்சியின் கீழ் நடந்து வரும் மற்றும் முன்மொழியப்பட்ட திட்டங்கள் தொடர்பான இலங்கையின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.







# கொட்டகலையில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து; மூவர் படுகாயம்!



**(கொட்டகலை நிருபர்)**

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதிகள் இருவரும் பாடசாலை ஆசிரியர் ஒருவரும் காயமடைந்து கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று கொட்டகலையில் இருந்து ஹட்டன் நோக்கியும், ஹட்டனில் இருந்து தலவாக்கலை நோக்கியும் அதிவேகத்துடன் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் கொட்டகலை எரிபொருள் நிரப்பும் நிலையம் அருகில் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஹட்டனில் இருந்து தலவாக்கலை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், மறு திசையில் பயணித்த ஓட்டோவை முந்திச் செல்ல முயன்றபோது, எதிர் திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பலத்த சேதம் அடைந்துள்ளன. மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரும் பலத்த காயங்களுடன் கொட்டகலை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து குறித்து திம்புள்ள பத்தனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# சிங்களப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

(நூருல் ஹுதா உமர்)

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் (நிலட்) அரச ஊழியர்களுக்கான நடாத்தப்பட்ட 100 மணித்தியாலம் இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி நெறியை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச சபையின் பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

மேலும், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட், சம்மாந்துறை பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ்.சுல்பா, இரண்டாம் மொழி பாட வளவாளர்களான என்.எம். புவாட், ஆர்.பி.சந்துனி மஹேஷிகா விஜயந்தி ஆகியோர்கள் கௌரவ அதிதிகளாக கலந்து சிறப்பித்தார்கள்.

இந்த நிகழ்வில் இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறிகளை பூர்த்தி செய்த பயிலுனர்களால் பல்வேறுபட்ட கலை நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு இடம் பெற்றன.















# மட்டு. மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளராக திருமதி சிவசங்கரி கங்கேஸ்வரன் பதவியேற்பு







**(மட்டக்களப்பு நிருபர்)**

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய ஆறாவது வலயக் கல்விப் பணிப்பாளராக திருமதி சிவசங்கரி கங்கேஸ்வரன் நேற்று திங்கள் கிழமை வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையை பொறுப்பேற்றார்.

கிழக்கு மாகாண கல்விச் செயலாளரின் கடிதத்திற்கு அமைய இந்த நியமனத்தை ஏற்றுக்கொண்டு அவர் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய, கல்விப் பணிப்பாளர் பதவி உயர்வு பெற்றதை தொடர்ந்து இந்த வலயத்திற்கான வலயக் கல்வி பணிப்பாளர் வெற்றிடம் நிலவிய நிலையில், மேற்படி பதவிக்காக விண்ணப்பம் கோரப்பட்டு, நேர்முக தேர்வும் இடம்பெற்றுள்ளது.

இந்த நேர்முக தேர்வின் அடிப்படையில் மாகாண கல்வி செயலாளரினால் மேற்படி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.






# களுவாஞ்சிகுடியில் கார் ஒன்று பள்ளத்தில் விழுந்து விபத்து

## 3 பேர் காயம்







**(மட்டக்களப்பு நிருபர்)**

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட குருக்கள்மடம் பகுதியில் கார் ஒன்று வீதியைவிட்டு விலகி மதகுடன் மோதி பள்ளத்தில் விழுந்து இன்று காலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பிலிருந்து சம்மாந்துறை நோக்கி பயணித்த கார் குருக்கள்மடம் முருகன் ஆலயத்திற்கு முன்னால் விபத் துக்குள்ளகியுள்ளது.

காரில் மூன்று பேர் பயணித்துள்ள நிலையில், அவர்கள் காயங்களுக்குள் ளாகி கலுவாஞ்சி குடி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகியதால் இந்த விபத்து சம்பவம் நடந்துள்ளதாக பொலிசார் தெரிவிக் கின்றனர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை களுவாஞ்சிகுடி போக்குவரத்துப் பொலி ஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தலைவர் புத்தளத்தில் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

அகில இலங்கை ஜம்இய்யத் துல் உலமா புத்தளம் நகரக்கிளை யின் அழைப்பை ஏற்று புத்தளத் திற்கு வருகை தந்த அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலை வர் அஷ்ஷெய்க் அல் முப்தி எம்.ஐ.எம். ரிஸ்வி ஹஸரத் புத்தளத்தில் உள்ள தலைமைகளால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன், அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி கடந்த வெள்ளிக்கிழமை புத் தளம் முஹியத்தீன் ஜும்ஆ பெரிய பள்ளியில் ஜும்ஆ பிரசங்கத்தையும் நிகழ்த்தினார்.

ஜும்ஆ தொழுகை நிறைவடைந்த தன் பின்னரே அவர் புத்தளம் தலை மைகளால் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் புத்தளம் பெரிய பள்ளியின் பரிபாலன சபை தலை வர் ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோச



கர் ஏ.டீ.எம்.நிஜாம் உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகர கிளையின் தலைவர் அஷ்ஷெய்க் ஏ.பி. ஜிப்னாஸ் அல் மிஸ்பாஹி உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள், புத்தளம் மாநகர சபையின் மேயர் பொறியியலாளர் ரின்சாத் அஹ்மதின் பிரத்தியேக செயலாளர் எம்.ஐ.எம்.ருஸ்தி ஆகி யோர் கலந்து கொண்டனர்.





# தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தில் உள்ளூர் உற்பத்தி விற்பனையாளர் சந்தை

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட உள்ளூர் உற்பத்தி விற்பனையாளர்களின் சந்தை மற்றும் கண்காட்சி நேற்று திங்கள் கிழமை இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் உ. உதய ஸ்ரீதர் தலைமையின், உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதனின் பங்குபற்றலுடன் பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் இந்த கண்காட்சி இடம்பெற்றது.

தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதுடன், நுகர்வோர்களிடம் இருந்து வருகின்ற கேள்விகள் மற்றும் விற்பனை வாய்ப்புகளை சலுகை விலையில் மக்கள் கொள்வனவு செய்வதற்கும் இக்கண்காட்சி வழிவகுத்தது

இதன்போது பிரதேச செயலக பிரிவிலிருந்து 20 இற்கும் மேற்பட்ட தொழில் முயற்சியாளர்கள் தங்களது உற்பத்தி மற்றும் கைவினை பொருள்களை காட்சிப்படுத்தியதுடன், விற்பனையும் செய்திருந்தனர்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகரத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் மற்றும் விற்பனையாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.















# குருக்கள் மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தில் வெகு விமர்சையாக நடைபெற்ற ஆசிரியர் தின விழா

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தில் நேற்று திங்கள் கிழமை ஆசிரியர் தின விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

குருக்கள்மடம் கல்வி சமூகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் அதிபர், ஆசிரியர்கள், மலர் மாலை அணிவித்து, பாண்டு வாத்திய இசையுடன் வரவேற்கப்பட்டனர்.

இதன்போது ஆசிரியர்களும், மாணவர்களும் ஒன்றிணைந்து பல்வேறு கிராமிய விளையாட்டு நிகழ்வுகளில் பற்கேற்றிருந்தனர்.

மேலும் ஆசிரியர் தின கீதம் பாடப்பட்டு ஆசிரியர்களின்பல்வேறுகண்கவர்நிகழ்வுகளும் மேடையை அலங்கரித்தன.



















# செட்டிபாளையம் சிவன் பாலர் பாடசாலையில் சிறப்பாக இடம்பெற்ற சிறுவர் விளையாட்டு விழா







**( வி.ரி. சகாதேவராஜா)**

மட்டக்களப்பு செட்டிபாளையம் சிவன் முன்பள்ளி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நேற்று முன்தினம் செட்டிபாளையம் மகா வித்தியாலய மைதானத்தில் பாடசாலை அதிபர் க.துரைராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பாலர் பாடசாலை கல்விப் பணியகத்தின் தவிசாளர் எம்.எ.அமீர்டீன் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு அதிதியாக செட்டிபாளையம் மகா வித்தியாலய அதிபர் வி.பேரின்பநாயகமும் கௌரவ அதிதிகளாக. மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் பி.குபேந்திரராஜா மற்றும் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலக

ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தின் விரிவுரையாளர் சு.இளங்கீரன் ஆயியோர் கலந்துகொண்டனர்.

விசேட அதிதியாக. சிவன் ஆலயத்தின் தலைவர் மு.பாலகிருஷ்ணன் மற்றும் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் செ.சக்திநாயகம் மற்றும் ஆலயங்கள் கிராம அபிவிருத்தி சங்கங்கள் விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

காண்போரை கவரும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட உடல் பயிற்சி கண்காட்சி, ஆக்கத் திறன் விருத்தியை மையமாகக் கொண்ட போட்டி நிகழ்வுகள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான சிறப்பு விசேட விளையாட்டுக்கள் முதலானவை சிறப்பாக இடம்பெற்றன.

அத்துடன், பரிசளிப்பு விழா, விருந்தினர் கௌரவிப்பு, அதனைத் தொடர்ந்து செயலாளர் ம. புவிதரனின் நன்றியுரையுடன் விளையாட்டு நிகழ்வு நிறைவுபெற்றது.











# மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் நிர்வாகிகள் தெரிவு





**( வி.ரி.சகாதேவராஜா)**

சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் புதிய நிர்வாகிகள் தெரிவுக்கான விஷேட பொதுக் கூட்டம் பள்ளிவாசல் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பின்வரும் நிர்வாகிகள் நம்பிக்கையாளர் சபையால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய தலைவராக முபாறக் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனங்களின் முகாமைத்துவப் பணிப்பாளர், அல்ஹாஜ் எம்.எஸ். எம். முபாறக், செயலாளராக ஓய்வு பெற்ற புகையிரத பாதுகாப்புப் பொறுப்பதிகாரி எஸார் மீராசாஹிப், பொருளாளராக தொழிலதிபர் அல்ஹாஜ் ஏ.எம். சமீம், பிரதித் தலைவராக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் டாக்டர் ஏ.எம். மிஸ்பாஹ் உப தலைவராக ஜம்இய்யத்துல் உலமா சபையின் சாய்ந்தமருது–மாளிகைக்காடு கிளையின் தலைவர் அல்ஹாஜ் மௌலவி எம்.எம்.எம். மீராசாஹிப், பிரதிச் செயலாளராக காரைதீவு பிரதேச செயலகத்தின் முதல் நிலை சிறுவர் நல உத்தியோகத்தர் ஏ. ஜெஸ்மீர், உதவிச் செயலாளராக தொழிலதிபர் ஏ.எச்.எம். ஹாரூன், உப பொருளாளராக ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் எம்.ஐ. நஜீம், கணக்காய்வாளராக நிந்தவூர் பிரதேச செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். சுல்பிகார், ஊடக ஒருங்கிணைப்பாளராக உதவித் தபால் அத்தியட்சகர் யூ.எல்.எம். பைசர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# திருமலையில் அரசாங்க அதிபர் தலைமையில் தொழில் முனைவோருக்கான பயிற்சித் திட்டம்





**(ஹஸ்பர் ஏ.எச்)**

சமூக சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக திருகோணமலை மாவட்டத்தில் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனையில் ஈடுபடுத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கான மூன்றாம் கட்ட பயிற்சித் திட்டம் நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் நடைபெற்றது.

மூதூர், கிண்ணியா, குச்சவெளி, வெருகல், பட்டிணமும் சூழலும், மொறவெவ தம்பலகாமம், கோமரன்கடவெல ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளைச் சேர்ந்த பல்வேறு தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ள மாற்றுத்திறனாளி தொழில்முனைவோர் இந்த பயிற்சியில் பங்குபற்றினர்.

அத்துடன் , மாற்றுத்திறனாளிகளுக்கு சந்தைப்படுத்தல் உத்திகள் குறிப்பாக சமூக ஊடகங்களை எவ்வாறு திறம்படப் பயன்படுத்தி பொருள்களை எளிதாக சந்தைப்படுத்தலாம் என்பது தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட சமூக சேவைகள் ஒருங்கிணைப்பாளர் த.பிரணவன் இந்த நிகழ்ச்சி திட்டத்தின் முக்கியத்துவத்தையும், இதனால் மாற்றுத்திறனாளிகளுக்கு கிடைக்கும் நன்மைகளையும் எடுத்துரைத்தார்.



# கரூர் நெரிசலில் பலியானவர்களுக்கு தமிழக சட்டப்பேரவையில் அஞ்சலி

தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடர் இன்று தொடங்கியது. கூட்டத் தொடரின் முதல் நாளான இன்று கரூர் கூட்ட நெரிசல் தொடர்பாக இரங்கல் தீர்மானம் கொண்டு வரப் பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழக சட்டப்பேரவையின் மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கும் என்று பேரவைத் தலை வர் மு.அப்பாவு கடந்த மாதம் அறி வித்தார். அதன்படி, தமிழக சட்டப் பேரவைக் கூட்டம் இன்று தொடங் கியது.

இதில், கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த 41 பேருக்கு சட்டப்பேரவை யில் இரங்கல் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து, கேரள மாநில முன்னாள்



முதல்வர் அச்சுதானந்தன், ஜார்கண்ட் மாநில முன்னாள் முதல்வர் சிபு சோரன், நாகலாந்து மாநில ஆளுநர் இல.கணேசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செய லாளர் சுதாகர் ரெட்டி, தமிழக அரசின் முதன்மைச் செயலாளர் பீலா வெங் கடேசன், அதிமுக எம்எல்ஏ அமுல் கந்தசாமி ஆகியோருக்கும் இரங்கல் தீர்மானம் வாசிக்கப்பட்டது.

முன்னதாகம் பேரவைக் கூட் டத்தை எத்தனை நாட்கள் நடத்துவது என்பதை முடிவு செய்வதற்கான அலுவல் ஆய்வுக் குழு கூட்டம் அப் பாவு தலைமையில் நேற்று நடைபெற் றது. பா.ஜ.க, கொம்யூனிஸ்ட்கள் தவிர்த்து மற்ற கட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர். பா.ம.க சார்பில் ஜி. கே.மணி பங்கேற்றார். பின்னர், அப் பாவு கூறுகையில், "அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடி வின்படி, சட்டப்பேரவைக் கூட்டம் ஆம் திகதி 14 முதல் 17 ஆம் திகதி வரை நடைபெறும்." என அறிவித்தார்.

பரபரப்பான அரசியல் சூழலில் இந்தக் கூட்டத்தொடர் தொடங்குவ தால் இக்கூட்டத்தொடரின் மீது எதிர்பாப்பு கூடியுள்ளது.

# அன்புமணிக்கு ஆதரவான எம்.எல்.ஏக்கள் சட்டப்பேரவை வளாகத்தில் போராட்டம்

பா.ம.க. சட்டமன்றக் குழு தலை வர், துணைத் தலைவர், கொறாடா வாக தங்களை நியமிக்க சபாநாய கரை வலியுறுத்தி அன்புமணி ஆதரவு பா.ம.க. எம்.எல்.ஏக்கள் மூன்று பேர் சட்டப்பேரவை வளாகத்தில் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்க ளின் போராட்டம் மிகவும் துரதி ருஷ்டவசமானது என ஜி.கே. மணி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையின் மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கியது. இதில், கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த 41 பேருக்கு சட்டப்பேரவையில் இரங்கல் தீர் மானம் கொண்டுவரப்பட்டு, அஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னதாக, சட்டப்பேரவைக்கு வருகை தந்த பா.ம.கவின் அன்புமணி ஆதரவு எம்.எல்.ஏக்கள் சிவகுமார், சதாசிவம், வெங்கடேஸ்வரன் ஆகிய மூன்று பேரும் சட்டப்பேரவைக்குள் செல்லும் 4 ஆம் நுழைவு வாயில் முன் அமர்ந்து, பா.ம.க. சட்டமன்றக் குழு தலைவர், துணைத் தலைவர், கொறாடாவாக தங்களை நியமிக்க



சபாநாயகரை வலியுறுத்தி கோஷங் களை எழுப்பி போராட்டத்தில் ஈடு பட்டனர். இதனால், அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது

# சாதிப் பெயர்களை நீக்குகின்ற அரசாணையை வரவேற்கிறோம்

## முதல்வரை சந்தித்த பின் திருமாவளவன் தெரிவிப்பு

"சாதிப் பெயர்களை நீக்கும் அர சாணையை வரவேற்கிறோம். அதற் காக முதல்வருக்கு நன்றி கூறினோம். இனி வரும் காலங்களில் எந்த பெயரும் சாதி அடிப்படையில் இருக் கக்கூடாது என்பதே எங்கள் கொள்கை முடிவு."

- இவ்வாறு விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத் தில் முதல்வர் ஸ்டாலினை, வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் சந்தித்து பேசினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடத்தில் பேசும்போது,

"கடந்த காலங்களில் சில தலை வர்களின் பெயர்கள் சாதிப் பெயர்களு டன் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே அவர்கள் கொண்டிருந்த அடையாளத்தை பின்பற்றுவதால் சாதியை வளர்க்கிறோம் என்று ஆகாது.

கோவையில் புதிதாக கட்டப்பட் டுள்ள பாலத்தை 'ஜி.டி பாலம்' என்று



பெயர் வைத்து புதிய தலை முறையிடம் கொண்டு போய் சேர்த் தால் மகிழ்ச்சி தான். ஆனால் 'ஜி. டி.நாயுடு பாலம்' என்ற பெயரில்தான் அவரை அடையாளப்படுத்த முடியும் என்று அரசு ஒரு முடிவை எடுத்தி ருப்பதால், அது சாதியை வளர்ப் பதற்கானதாக இருக்காது என நம்பு கிறோம்.

இனிவரும் காலங்களில் எந்தப் பெயரும் சாதி அடிப்படையில் இருக் கக் கூடாது என்பதே எங்கள் கொள்கை முடிவு. இன்னும் சில சாதிப் பெயர்களில் உள்ள "ன்" என்ற விகுதியை மாற்றி "ர்" விகுதியாக மாற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். பின்னர் சாதிப் பெயர் களை நீக்கும் அரசாணையை வெளி யிட்டதற்காக முதல்வரிடம் நன்றி கூறினோம். நியமன தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கு உடனடியாக பணி நியமன ஆணை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினோம்.

வட சென்னை பகுதி வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து வருவதாக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார். காசா தொடர்பான தீர்மானத்தை சட்டப்பேரவையில் கொண்டு வரு வதை நாங்கள் வரவேற்கிறோம். ஒரு சில கோரிக்கைகள் குறித்து தான் முதல்வரிடம் இன்று பேசினோம். தூய்மைப் பணியாளர்களின் கோரிக் கைகள் குறித்து இனிவரும் நாள் களில் எங்கள் எம்எல்ஏக்கள் சட்டப் பேரவையில் குரல் கொடுப்பார்கள். தனியார் மயத்தை நாங்கள் முழுமை யாக எதிர்க்கிறோம்." என்று தெரிவித்தார்.




# காசா அமைதி ஒப்பந்த ஆவணத்தில் கையெழுத்திட்டார் டொனால்ட் ட்ரம்ப்

காசா அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஆவணத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கையெழுத்து இட்டுள்ளார்.

இஸ்ரேல் - காசா இடையேயான போர் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முன் மொழிந்த 20 அம்சங்கள் கொண்ட ஒப்பந்தத்தால் முடிவுக்கு வந்துள்ளது.

இருதரப்பிலும் போர் நிறுத்தப்பட்டுள்ளது. இஸ்ரேல் பிணைக்கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவித்தும் உள்ளனர்.

ட்ரம்ப் அறிவித்த காசா அமைதி ஒப்பந்தம் அதிகாரபூர்வமாக எகிப்தில் கையெழுத்தானது.

எகிப்தின் ஷர்ம் எல் ஷேக் நகரில் ட்ரம்ப் மற்றும் எகிப்து ஜனாதிபதி அப்தெல் பட்டா எல் சிசி தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது.

இதில் பங்கேற்பதற்காக ட்ரம்ப் எகிப்து வந்து சேர்ந்தார். இந்த மாநாட்டில் ஐ.நா. பொதுச் செயலாளர் குட்டரெஸ் மற்றும் 20 இற்கும் மேற்பட்ட உலக நாடுகளின் தலைவர்கள், அவர்கள் சார்பில் அனுப்பப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் காசா அமைதி ஒப்பந்தம் அதிகாரபூர்வமாக கையெழுத்தானது.














# பாலஸ்தீன கைதிகள் 250 பேரும் 1,700 பணய கைதிகளும் விடுவிப்பு

குற்றச் செயல்களுக்காகத் தண்டிக்கப்பட்ட 250 பாலஸ்தீன கைதிகளும், குற்றச்சாட்டு இல்லாமல் இஸ்ரேலால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 1,700 பணயக் கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, ஹமாஸ் அமைப்பினரால் பிடிக்கப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தவர்களின் 4 உடலங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

அவர்களின் உடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் இஸ்ரேலிய பொலிஸ் அதிகாரிகள் மேற்படி 4 உடலங்களையும், டெல் அவிவில் உள்ள அபு கபீர் தடயவியல் அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஹமாஸ் அமைப்பிடம் உள்ள ஏனைய உடலங்கள் எப்போது கையளிக்கப்படும் என்ற தகவல் இதுவரை வெளியிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.











கனடா முரசு
செவ்வாய்க்கிழமை 14/10/2025

ஒன்டாரியோ விபத்தில் முதியவர் உயிரிழப்பு




02



# இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் கனடிய வெளியுறவு அமைச்சர் சந்திப்பு

**இந்தியா - கனடா இடையில் நிலவிய தூதரக பதற்றத்திற்கு பின்னர், உறவுகளை மீண்டும் வலுப்படுத்தும் நோக்கில் கனடாவின் வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த் இந்தியாவுக்கு மேற்கொண்ட மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.**

**அனிதா ஆனந்த் தனது சமூக வலைத் தளத்தில் மோடியுடன் நியூடில்லியில் நடந்த சந்திப்பின் புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.**

அந்த பதிவில், இந்த சந்திப்பு, கடந்த கோடைக்காலத்தில் ஜி7 உச்சி மாநாட்டில் கனடாவில் நடைபெற்ற மோடி - பிரதமர் மார்க் கார்னி சந்திப்பில் ஏற்பட்ட நல்லிணக்கத்தின் தொடர்ச்சியாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர், அனிதா ஆனந்த் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்ர மணியம் ஜெய்சங்கர் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில், இரு நாடுகளுக்குமிடையிலான வணிக ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வழிமுறையை விவரித்துள்ளனர்.

2010 முதல் இடைவிடாது தொடங்கி நிறுத்தப்பட்டு வந்த இரு தரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அந்த அறிக்கையில், “இரு நாடுகளுக்குமிடையிலான உறவை மீண்டும் நிலைப்படுத்த முறையாக கட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகளாவிய பொருளாதார நிச்சயமின்மை மற்றும் புவியியல் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், “வலுவான மற்றும் நிலைத்திருக்கும் கனடா-இந்தியா உறவு அவசியம்” என இரு வெளியுறவு அமைச்சர்களும் வலியுறுத்தினர்.






# ஒன்டாரியோ விபத்தில் முதியவர் உயிரிழப்பு

ஒன்டாரியோ மாகாணத்தில், பிரின்ஸ் எட்வர்ட் கவுண்டியில் இடம் பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என ஒன்டாரியோ மாகாண பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த விபத்து திங்கள் கிழமை காலை சுமார் 8.15 மணியளவில், வெல்லிங்டன் அருகே உள்ள ஒரு நெடுஞ்சாலையில் இடம்பெற்றது.

பொலிஸ் தகவலின்படி, கிழக்கு நோக்கி சென்றிருந்த ஒரு பிக்கப் லொறி வீதியை விட்டு விலகி மரங்களில் மோதியது. வாகனத்தில் ஒருவரே இருந்தார் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவர் வாகனத்திலிருந்து வெளியேறியிருந்தாலும், அருகிலுள்ள இடத்தில் உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார். இவ்விபத்தில் உயிரிழந்தவர் க்வின்டே வெஸ்ட் பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொலிஸ் தற்போது விபத்து குறித்து மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகிறது.

---



# ஜனாதிபதியாக பதவி உயர்வு கொடுத்ததற்கு நன்றி: ட்ரம்பை கிண்டல் செய்தார் கனடா பிரதமர் கார்னி

கனடா பிரதமரை, கனடாவின் ஜனாதிபதி என ட்ரம்ப் அழைத்ததைக் காட்டும் சுவாரஸ்ய காணொலி ஒன்று வெளியாகியுள்ளது.

எகிப்தில் நடைபெற்ற மத்திய கிழக்கு உச்சி மாநாட்டின்போது, கனடா பிரதமரான மார்க் கார்னியை தவறுதலாக கனடாவின் ஜனாதிபதி என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அழைத் தார்.

ட்ரம்பின் உரை முடிந்ததும் மேடையிலேயே அவரை சந்தித்த கார்னி, ஜனாதிபதியாக எனக்கு பதவி உயர்வு கொடுத்ததற்கு நன்றி என கிண்டலாகக் கூறினார்.

தன் தவறை உணர்ந்தாலும், ட்ரம்பும் கொஞ்சமும் சளைக்கவில்லை. பதிலுக்கு, உங்களை ஆளுநர் என அழைக்காமல் விட்டேனே அதற்காக சந்தோஷப்படுங்கள் என்றார்.

அந்தக் காட்சிகள் சமூக ஊடகங்களில் அதிகம் பகிரப்பட்டுவருகின்றன.




# கனேடிய பொருளாதார நிபுணர் பீட்டர் ஹவிட்டுக்கு நோபல் பரிசு

2025 ஆம் ஆண்டுக்கான பொருளாதார துறைக்கான நோபல் பரிசு கனேடிய பொருளாதார நிபுணர் பீட்டர் ஹவிட், நெதர்லாந்தின் ஜோயல் மோகிர் மற்றும் பிரெஞ்சு நாட்டு பிலிப் ஆகியோன் ஆகிய மூவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஸ்வீடனின் ராயல் அகாடமி ஆஃப் சயின்சஸ் இந்த தகவல்களை அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ளது. இவர்கள் “புதுமை சார்ந்த பொருளாதார வளர்ச்சியை விளக்கியதற்காக” இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது என அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது என் வாழ்க்கையின் கனவு நனவான தருணம் என பீட்டர் ஹவிட் தெரிவித்துள்ளார். அதிகாலை நேரத்தில் ஒரு ஸ்வீடன் செய்தியாளர் அவரது மனைவியின் தொலைபேசிக்கு அழைத்து தகவலை தெரிவித்ததாக அவர் கூறியுள்ளார்.



கமிட்டியின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரும் முன்னரே எனக்குத் தெரிந்துவிட்டது. இன்று முழுவதும் தொலைபேசி அழைப்புகளைப் பதிலளிப்பதில் கழியப்போகிறது,” என்று அவர் தெரிவித்துள்ளார். ஹவிட் மற்றும் ஆகியோன் இருவரும் கணிதப் பயன்பாட்டின் மூலம் பொருளாதாரத்தில் முக்கியமான “படைப்பாற்றல் அழிவு” என்ற கொள்கையை விளக்கினர்.

ஹவிட் கூறுகையில், “நான் 30 ஆண்டுகளாக இணைந்து பணியாற்றி வரும் ஆகியோனுடன் இந்த வெற்றியை கொண்டாட ஆவலாக உள்ளேன். எங்கள் குடும்பத்துடன் சேர்ந்து ஸ்வீடனுக்கு சென்று கொண்டாடப் போகிறோம்,” எனத் தெரிவித்துள்ளார்.

79 வயதான ஹவிட், மொன்ட்ரீயல் நகரில் உள்ள மெக் கில் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் பட்டம் பெற்றார்; பின்னர் வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தில் முதுநிலை பட்டம் முடித்தார்.

தற்போது அவர் அமெரிக்காவின் பிரவுன் பல்கலைக்கழகத்தில் சமூக அறிவியல் பேராசிரியராக கடமையாற்றி வருகின்றார்.

